# ஜனவரி – 06 – ஞாயிறு
## ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா

**"ஆண்டவரோ உன்மீது எழுந்தருள்வார் அவரது மாட்சி உன்மீது தோன்றும்! எசா 60:2**

### முதல் வாசகம் : ஏசாயா 60 : 1 - 6

எருசலேமே! எழு! ஒளிவீசு! உன் ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது! இதோ! இருள் பூவுலகை மூடும் காரிருள் மக்களினங்களைக் கவ்வும் ஆண்டவரோ உன்மீது எழுந்தருள்வார் அவரது மாட்சி உன்மீது தோன்றும்! பிற இனத்தார் உன் ஒளிநோக்கி வருவர் மன்னர் உன் உதயக் கதிர்நோக்கி நடைபோடுவர். உன் கண்களை உயர்த்தி உன்னைச் சுற்றிலும் பார் அவர்கள் அனைவரும் ஒருங்கே திரண்டு உன்னிடம் வருகின்றனர் தொலையிலிருந்து உன் புதல்வர் வருவர் உன் புதல்வியர் தோளில் தூக்கி வரப்படுவர். அப்பொழுது, நீ அதைக் கண்டு அகமகிழ்வாய் உன் இதயம் வியந்து விம்மும் கடலின் திரள் செல்வம் உன்னிடம் கொணரப்படும் பிற இனத்தாரின் சொத்துகள் உன்னை வந்தடையும். ஒட்டகங்களின் பெருந்திரள் உன்னை நிரப்பும் மிதியான், ஏப்பாகு ஆகியவற்றின் இளம் ஒட்டகங்களும் வந்து சேரும் இளம் நாட்டினர் யாவரும் பொன், நறுமணப்பொருள் ஏந்திவருவர். அவர்கள் ஆண்டவரின் புகழை எடுத்துரைப்பர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் செய்வார்கள்.

### இரண்டாம் வாசகம் : ஏபேசியர் 3 : 2 – 3, 5 – 6

சகோதர சகோதரிகளே! உங்கள் நலனுக்காகக் கடவுளின் அருளால் எனக்களிக்கப்பட்ட பொறுப்பைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள் என எண்ணுகிறேன். அந்த மறைபொருள் எனக்கு இறை வெளிப்பாட்டின் வழியாகவே தெரியப்படுத்தப்பட்டது. அதைப்பற்றி நான் ஏற்கெனவே சுருக்கமாக உங்களுக்கு எழுதியிருக்கிறேன். அந்த மறைபொருள் மற்ற தலைமுறைகளில் வாழ்ந்த மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இப்போது தூய ஆவி வழியாகத் தூய திருத்தூதருக்கும் இறைவாக் கினருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நற்செய்தியின் வழியாக, பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள் என்பதே அம்மறைபொருள்.

### நற்செய்தி : மத்தேயு 2 : 1 – 12

ஏரோது அரசன் காலத்தில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார். அப்போது கிழக்கிலிருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்து, யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக்கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம் என்றார்கள். இதைக் கேட்டதும் ஏரோது அரசன் கலங்கினான். அவனோடு எருசலேம் முழுவதும் கலங்கிற்று. அவன் எல்லாத் தலைமைக் குருக்களையும், மக்களிடையே இருந்த மறைநூல் அறிஞர்களையும் ஒன்றுகூட்டி, மெசியா எங்கே பிறப்பார் என்று அவர்களிடம் விசாரித்தான். அவர்கள் அவனிடம் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் அவர் பிறக்க வேண்டும். ஏனெனில், யூதா நாட்டுப் பெத்லகேமே, யூதாவின் ஆட்சி மையங்களில் நீ சிறியதே இல்லை ஏனெனில், என் மக்களாகிய இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார் என்று இறைவாக்கினர் எழுதியுள்ளார் என்றார்கள். பின்பு ஏரோது யாருக்கும் தெரியாமல் ஞானிகளை அழைத்துக்கொண்டுபோய் விண்மீன் தோன்றிய காலத்தைப் பற்றி விசாரித்து உறுதி செய்து கொண்டான். மேலும் அவர்களிடம். நீங்கள் சென்று குழந்தையைக் குறித்துத் திட்டவட்டமாய்க் கேட்டு எனக்கு அறிவியுங்கள். அப்பொழுது நானும் சென்று அக்குழந்தையை வணங்குவேன் என்று கூறி அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பி வைத்தான். அரசன் சொன்னதைக் கேட்டு அவர்கள் புறப்பட்டுப் போனார்கள். இதோ! முன்பு எழுந்த விண்மீன் தோன்றிக் குழந்தை இருந்த இடத்திற்கு மேல் வந்து நிற்கும்வரை அவர்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்தது. அங்கே நின்ற விண்மீனைக் கண்டதும் அவர்கள் மட்டில்லாப் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். வீட்டிற்குள் அவர்கள் போய்க் குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள் தங்கள் பேழைகளைத் திறந்து பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். ஏரோதிடம் திரும்பிப் போக வேண்டாம் என்று கனவில் அவர்கள் எச்சரிக்கப்பட்டதால் வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினார்கள்.

**தியானம்:** இன்று நாம் திருக்காட்சி விழாவை கொண்டாடுகின்றோம். 3 அரசர்கள் வந்து யேசுவை வணங்கி பொன்னும்,வெள்ளியும், தூபமும் கொடுத்தார்கள் என்று எமது சிறுவயது முதலே நாம் அறிந்திருக்கின்றோம். இவை யாவும் ஒரு அரசனுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையில் ஒரு அங்கம். 3ஞானிகளும் யேசுவை பாவத்தில் இருந்து மீட்க வந்த அரசனாகவே நம்பினார்கள். அதனால் தான் ஒரு அரசனுக்குரிய மரியாதையை அவர்கள் கொடுத்தார்கள். இது ஏரோது அரசனுக்கு இடையூறாக இருந்தது. தனது அரசுப் பதவிக்கு பங்கம் வந்து விடும் என்று எண்ணி கலங்கினான். இன்று உலக நாடுகளில் இதேநிலை தான் காணப்படுகின்றது. யார் பெரியவர் என்ற போட்டியில் ஒருவரை ஒருவர் தாக்குகின்றார்கள். பதவிக்காக சண்டை போட்டுக் கொள்கின்றார்கள். இதனால் பாதிக்கப்படுவது யார்? முனித உயிர்கள் மதிப்பற்று போய்விட்டன. அண்மையில் இந்தியாவில் குடிபோதையில் அறுவை சிகிச்சை செய்த வைத்தியரால் ஒருதாயும், சேயும் இறந்தார்கள். பயணிக்க முடியாத விமானத்தை பறக்கவிட்டு இந்தோனேசியாவில் 189 பயணிகள் கடலில் வீழ்ந்து மாண்டார்கள். இவையாரால் நிகழ்ந்தது? கடவுளாலா? மனிதனாலா? அதிகபணம் சம்பாதிக்க, பேர் புகழுடன் வாழ ஆசைப்படும் மனிதனால் தான் நிகழ்கின்றன. நாம் கடவுளை குறை கூறிக்கொண்டு தான் இருக்கின்றோம். எமது தவறுகளை சீர் தூக்கிப் பார்ப்பதில்லை. இவை எல்லாம் எங்கே போய் முடியப் போகின்றது. யாரையும் நம்பமுடியவில்லை. எங்கும் போலி முகங்கள். இவற்றின் மத்தியில் நாம் எமது விசுவாச வாழ்வை காத்துக் கொண்டு, இறை அரசை பறைசாற்ற வேண்டிய பொறுப்பில் இருக்கின்றோம். முடியுமா? முதல் வாசகத்தில் கூறப்பட்டது போல் இருள் பூவுலகை மூடியுள்ளது, காரிருள் மக்கள்மேல் சூழ்ந்துள்ளது. ஆனால் கடவுளின் ஒளி கடவுளின் மக்கள்மேல் ஒளிரும் என்ற நம்பிக்கையுடன் இருளின் மக்களாகஅல்லாமல் ஒளியின் மக்களாக நாம் வாழ்வோம்